1993 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தே. ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் விழுப்புரத்தை மாவட்ட தலைநகராக அறிவித்திருக்கிறார்கள். ஏறக்குறைய எல்லா மாவட்ட தலைநகரங்களிலும் கால்நடை மருத்துவமனை இருக்கிறது. அதைக் கருத்திற் கொண்டு, நாங்கள் இடம் தேர்வு செய்து கொடுத்தால், இந்த ஆண்டே கால்நடை மருத்துவமனையை அரசு அமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது விழுப்புரம் நகராட்சி எல்லைக்குள் விழுப்புரம் கால்நடை மருந்தகம் தனியார் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. புதிய கட்டிடம் கட்டுவதற்கு நகராட்சி ஆணையரிடம் ஒரு புல எண்ணைக் கொடுத்து, இதற்குட்பட்ட நிலத்தின் உரிமையை இந்தத் துறைக்கு மாற்றித் தரவேண்டுமென்று கேட்டிருந்தோம். ஆணையர் அவர்கள் அந்த இடத்திலே மனமகிழ் மன்றம் கட்ட வேண்டுமென்று சொல்லி, அந்த இடத்தைத் தரவில்லை. எனவே அங்கே கால்நடை மருந்தகம் கட்டவில்லை. இடத்தைத் தருவார்கள் என்று சொன்னால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 417, திரு.க. அர்ச்சுனன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

417—

தோட்டக்கலைத் துறை மூலம் மானிய விலையில் வழங்கப்படும் செடிகள்.

*16533—திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோட்டக்கலைத் துறை மூலம் மான்ய விலையில் வழங்கப்படும் செடிகள் தரமற்றதாக இருப்பதையும் அதற்கும் வெளி அங்காடி விலைக்கும் வேறுபாடு ஏதும் இல்லை என்பதையும் அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தோட்டக்கலைத் துறை மூலம் மானிய விலையில் வழங்கப்படும் செடிகள் தரமற்றது என்பது உண்மையல்ல. தோட்டக்கலைத் துறையில் மானிய விலையில் வழங்கப்படும் செடிகள் விலை குறைந்தவையாக உள்ளன. ஆனால் வெளி அங்காடியில் விற்கப்படும் செடிகள் அதிக விலையில் உள்ளன.

(ஆ) எழவில்லை.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டக்கலைத் துறை செடிகளை விற்பதில் லாப கரமாக இயங்குகிறதா? கடந்த ஆண்டு இந்தத் துறை மூலமாக அரசுக்குக் கிடைத்த லாபம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டக் கலைத் துறை மூலமாக நடத்தப்படும் பண்ணைகள் லாபத்திற்காக நடத்தப்படுபவை அல்ல. விவசாயிகளுக்குத் தரமான செடிகளை, பூச்சி, நோய்கள் இல்லாத செடிகளை வழங்குவதற்காக இத் துறை செயல்பட்டு வருகிறது. எனவே இதன் லாப நட்டக் கணக்குகளை அறிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் அதற்கு வேண்டிய பதிலைத் தருகிறேன்.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டக்கலைத் துறை மூலமாகச் செடிகளை சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு மட்டும் சலுகை விலையில் அளிக்கப்படுகிறதா அல்லது பெரிய விவசாயிகளுக்கும் வழங்கப் படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டக் கலைத் துறை மூலமாக மானிய விலையில் வழங்கப்படும் செடிகள் சிறு மற்றும் குறு விவசாயி களுக்கு வழங்கப்படுகிறது. அதைப்போல தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் மலைவாழ் மக்களுக்கும் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டக்கலைத் துறை மூலமாகக் குறைந்த விலை யிலே வழங்கப்படுகின்ற பழச் செடிகளை சரியான முறையிலே தோட்டக் கலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு, விநியோ கிக்கப்படாததால், பல இடங்களில், அந்தச் செடிகளை வைத்த வுடன் பட்டுப் போகின்ற நிலைமைகள் எல்லாம் இருக்கிறது.

1993 ஏப்ரல் 21]

அந்தச் செடிகளை யார் உரிய முறையில் வளர்ப்பார்கள் அல்லது நல்ல முறையில் பராமரிப்பார்கள் என்று பார்க்காமல், யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கும் நிலைமை இருக்கிறது. ஆகவே அந்தச் செடிகளை நல்ல தரமுள்ளதாகவும், அதை வளர்த்து ஒழுங்காகப் பராமரிக்கக்கூடியவர்களுக்கும் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டக்கலைப் பண்ணையில் தனிப் பயிற்சி பெற்ற தொழில்நுட்ப அலுவலர்கள் கண்காணிப்பில் தான் உற்பத்தி செய்து, நாற்றுகள் வழங்கப்படுகின்றன. சில இடங்களில் சாலைகளில் கூட தள்ளு வண்டிகளில் வைத்து பல பழச் செடிகள், மலர்ச் செடிகளை விற்கிறார்கள். மக்கள் ஏமாந்து, அவற்றை வாங்கி விடுகிறார்கள், எனவே யார் தகுதி படைத்தவர், யார் நன்றாக வளர்ப்பார்கள் என்று பார்க்க முடியாது. விரும்பி இந்தத் துறைக்கு விவசாயிகள் வருவார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு அரசு தரமான செடிகளை மானிய விலையில் வழங்கிக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 418, திரு. கே. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. வெ. தமிழரசு கேட்கிறார்.

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

418—

மலைவாழ் கிராமங்களுக்கு சூரிய ஒளி மூலம் தெருவிளக்கு வசதி

*10562—திரு. கே. கந்தசாமி:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் கிராமங்களுக்கு சூரிய ஒளி மூலம் (Solar Energy) தெருவிளக்குகள் எரியச் செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், சேலம் மாவட்டத்தில் எத்தனை கிராமங்களில் இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

(ஆ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டத்தில் சூரிய ஒளி மூலம் தெரு விளக்குகள் பொருத்தி மொத்தம் 26 பெரிய கிராமங்களுக்கும், 95 குக்கிராமங்களுக்கும் மின் வசதி செய்யப்பட்டுள்ளது.